# மே – 28 – திங்கள்

## புனித ஜெல்மா கல்கானி

## அல்லேலூயா! நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்: திபா. 111:1

## முதல் வாசகம் : 1 பேதுரு 1 : 3 – 9

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி! அவர் தம் பேரிரக்கத்தின்படி, இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச்செய்து நமக்குப் புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம். அழியாத, மாசற்ற, ஒழியாத உரிமைப்பேறும் உங்களுக்கென விண்ணுலகில் வைக்கப்பட்டுள்ளது.நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாய் மீட்புக்காகக் கடவுளுடைய வல்லமையால் பாதுகாக்கப்பட்டு வருகிறீர்கள். இம்மீட்பு இறுதிக் காலத்தில் வெளிப்பட ஆயத்தமாய் உள்ளது.இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகைச் சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், அந்நாளிலே பேருவகை கொள்வீர்கள். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும்.நீங்கள் அவரைப் பார்த்ததில்லை எனினும் அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்பொழுதும் நீங்கள் அவரைக் கண்டதில்லை எனினும் நம்பிக்கை கொண்டு சொல்லொண்ணா, ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்து பேருவகை கொள்கிறீர்கள்.இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறீர்கள். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி! அவர் தம் பேரிரக்கத்தின்படி, இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்குப் புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றும் நினைவில் கொள்வார்.

## நற்செய்தி : மாற்கு10 : 17 - 27

அக்காலத்தில் இயேசு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தபோது வழியில் ஒருவர் அவரிடம் ஓடிவந்து முழந்தாள்படியிட்டு, "நல்ல போதகரே, நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்று அவரைக்கேட்டார்.அதற்கு இயேசு அவரிடம், "நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர்? கடவுள் ஒருவரைத்தவிர நல்லவர் எவருமில்லையே.உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? "கொலைசெய்யாதே் விபசாரம் செய்யாதே் களவு செய்யாதே் பொய்ச்சான்று சொல்லாதே. வஞ்சித்துப் பறிக்காதே. உன்தாய் தந்தையை மதித்துநட" என்றார்.அவர் இயேசுவிடம், "போதகரே, இவை அனைத்தையும் நான் என் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வந்துள்ளேன்" என்றுகூறினார். அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்துநோக்கி, "உமக்கு இன்னும் ஒன்றுகுறைபடுகிறது. நீர்போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக்கொடும். அப்போது விண்ணகத்தில் நீர்செல்வராய் இருப்பீர். பின்புவந்து என்னைப் பின்பற்றும்" என்று அவரிடம் கூறினார்.இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம்வாடி வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது.இயேசு சுற்றிலும் திரும்பிப்பார்த்துத் தம்சீடரிடம், "செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும்கடினம்" என்றார்.சீடர்கள் அவர் சொன்னதைக் கேட்டுத் திகைப்புக்கு உள்ளானார்கள். மீண்டும் இயேசு அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும்கடினம்அவர்கள் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.சீடர்கள் மிகவும் வியப்பில் ஆழ்ந்தவர்களாய், "பின் யார்தாம் மீட்புப்பெறமுடியும்?" என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.இயேசு அவர்களைக் கூர்ந்துநோக்கி, "மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளுக்கு அப்படியல்ல, கடவுளால் எல்லாம் இயலும்" என்றார்.

**தியானம்:** எமக்காக மரித்து உயிர்த்து எங்கள் கூடவே வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக அவர் அன்புக் கட்டளைகளின் படி வாழும் பொழுது நாங்கள் அவருடன் ஒன்றித்துவாழ்வது இலகுவாக இருக்கும். எவ்வாறான கஸ்ட துன்பங்கள், வேதனைகள் ஏமாற்றங்கள் எதுவாக இருந்தாலும் இவற்றை ஏற்று வாழும் பொழுது அவர்மேல் கொண்ட நம்பிக்கையின் நிமித்தம் எமக்கு மிகப் பெரிய ஆறுதலைக் கொடுக்க வல்லவராக இருக்கின்றார் என்பதை இன்றைய வாசகங்கள் தெரிவிக்கின்றது. நற்செய்தி வாசகத்தில் நிலை வாழ்வை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும், என்ற கேள்விக்கு இயேசு கட்டளைகளை கடைப்பிடிக்கும்படியும், பிறருக்கு பகிர்ந்து வாழும்படியும் கூறுகின்றார். யாவும் செய்கின்றேன் என்று அவர் கூறும் பொழுது இறுதியாக "என்னைப் பிற்பற்றி வா" என்று அழைக்கின்றார். நாங்களும் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள இன்று எங்களையும் அவர் அழைக்கின்றார். ஆனால் நாங்கள் அதை உணராதவர்களாக இறைவனுக்கு முன்னுரிமை கொடுக்காது எமது எண்ணத்தின்படியே உலக காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து இறைவனை மறந்து வாழ்கின்றோம். இவ்வாறு வாழ்ந்தோமேயானால் எவ்வாறு நிலைவாழ்வை நாங்கள் கண்டுகொள்ள முடியும்? இறைவன் கட்டளைகளை கடைப்பிடிப்பது என்பது இலகுவான காரியமல்ல ஆனால் யாவற்றையும் உடைத்தெறிந்து கட்டளைகளின்படி வாழ்வோமேயானால் எமக்கு கிடைக்கும் மீட்போ விலைமதிப்பற்றது. "நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறீர்கள்" (1பேது. 1:9). எனவே நாங்கள் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து நிலை வாழ்வைக் கண்டடைய எங்களைத் தயார்படுத்துவோம்.